Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.384/2025

Dated 08-04-2026
Deposition of witness for : PW 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சூர்யா | வயது | : | 23 |
| தந்தை பெயர் | : | பாலா | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | கலைஞர் நகர் 1ம் தெரு | தொழில் | : | டைல்ஸ் வேலை |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused 1 to 5 produced. Accused 6 to 13 present**

**Ld. D. Counsel not Present**

சாட்சியை தஞ்சாவூர் தாலுக்கா காவல்நிலைய மு**.**நி**.**கா**. 1348** பிரகாஸ்குமார் அடையாளம் காட்டினார்**.**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடும்பத்தோடு வசித்து டைல்ஸ் வேலை செய்து வருகிறேன்.

2) இந்த வழக்கில் இறந்துபோன சசிகுமார் என் சகோதரன். கடந்த 9.9.2025 ம் தேதி காலை

10.40 மணியளவில் இறந்துபோன சசிகுமார் எனக்கு போன் செய்தார். இந்திரா நகரை சேர்ந்த சக்தி அவருடைய நண்பர் ராஜா என்ற சஞ்சய் ஆகியோர் என்னிடம் சண்டை போடுவதாக சொன்னார். நான் உடனே இறந்துபோன சசிக்குமாரிடம் டேய் எந்த சண்டையும் போடாதே எது இருந்தாலும் பேசிக்கொள்ளலாம் என்று சசிக்குமாரிடம் சொன்னேன்.

3) அன்று காலை 11.00 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது எனது வீட்டிற்கு திலகன், பிரதீப், சசிக்குமார் மூன்று பேரும் வந்தார்கள். அப்போது நான் என்ன ஆச்சு என்று கேட்டபோது சக்தி மற்றும் அவருடைய தம்பி கோகுல், ராஜா என்ற சஞ்சய், பிரபா, சுஜித்குமார், மோகன்ராஜ், ரஞ்சித், சரண், வசந்த், பிரேம்குமார், நிமோசன், சபரி அனைவரும் கலைஞர் நகர் 1ம் தெருவிற்கு வந்தார்கள். அப்போது சக்தி எனது தம்பியிடம் உன் வீட்டில் உட்கார்ந்து கஞ்சா அடித்தால் நீ ஒத்துக்கொள்வாயா என்றுகேட்டார். அப்போது இறந்து போன சசிகுமார் அதற்காக அவனை அடிப்பியா என்று கேட்டார். அப்போது கூட இருந்தவர்களும் சத்தம் போட்டார்கள்.

4) கொஞ்ச நேரத்தில் நாங்கள் வாடகை வீட்டில் குடியிருக்கிறோம் இங்கே சண்டைபோடவேண்டாம் எதுவாக இருந்தாலும் பேசிக்கொள்ளலாம் இங்கிருந்து போங்கடா என்று நான் சொன்னேன். அப்போது இறந்த சசிக்குமார் தெருமுனை நோக்கி நடந்துசென்றார். அப்போது மேற்கண்ட எதிரிகள் சசிகுமாரின் பின்னாலேயே சென்றார்கள். உடனடியாக அவனுக்கு பாதுகாப்பாக நான், பிரதீப், திலகன் ஆகிய மூவரும் பின்னாடி சென்றோம்.

5) அப்போது கலைஞர் நகர் 1ம் தெருவில் போய்கொண்டிருக்கும்போது சுஜித் என்பவர் தன்னுடைய கையை முறுக்கி இறந்துபோன சசிகுமாரின் தலையில் குத்தினார். உடனே சக்தி மறைத்து வைத்திருந்த வாளை எடுத்து சசிக்குமாரின் தலையிலேயே வெட்டிவிட்டார். அப்போது சசிக்குமார் தடுத்ததால் அவருடைய கையிலும் வெட்டுபட்டது. அப்போது ராஜாவும் மறைத்து வைத்திருந்த அருவாளை எடுத்து சசிக்குமாரின் மண்டையிலேயே வெட்ட ஆரம்பித்து விட்டார். நாங்கள் தடுக்க போனபோது சுற்றியிருந்த நபர்கள் சரண் மற்றும் பிரபா இருவரும் என்னை பிடித்துகொண்டு சசிக்குமாரை வெட்டுவதை நான் தடுக்க முயன்றதை தடுத்து விட்டார்கள்.

6) திலகன் என்பவரும் தடுக்க வந்தார். அவரையும் பிரபா என்பவர் கையாலேயே குத்தி விட்டார். அப்போது நாங்கள் கத்தினோம். அப்போது எதிரிகள் நாங்கள் கத்தியதால் நீங்கள் தடுத்தால் உங்களுக்கும் இதே நிலைமைதான் என்று கூறி அனைவரும் மிரட்டினார்கள்.

7) எதிரிகளை பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். ஆஜர் எதிரிகளில் வரிசையில் **4 வதாக நிற்கும் எதிரி சக்தி** என்பவர்தான் வாளை எடுத்து சசிக்குமாரின் மண்டையில் வெட்டினார். வரிசையில் **2 வதாக நிற்கும் எதிரி ராஜா** என்பவர்தான் அருவாளால் சசிக்குமாரை வெட்டினார். **வரிசையில் 3 வதாக நிற்கும் எதிரி பிரபாதான்** என்னை பிடித்துக்கொண்டார். பிறகு ராஜா வைத்திருந்த அருவாளை பிரபா வாங்கி சசிக்குமாரை வெட்டினார். சக்தி வைத்திருந்த வாளை அவருடைய தம்பி கோகுல் வாங்கி சசிக்குமாரை வெட்டினார். ஆஜர் எதிரிகளில் **வரிசையில் 5 வதாக நிற்கும் எதிரிதான்**

**கோகுல்** ஆவார். ( நீதிமன்றம் வரிசையில் 4 வதாக நின்ற நபரை பார்த்து உங்கள் பெயர் என்ன என்று கேட்டபோது அவர் தன்னுடைய பெயர் சக்தி என்ற ஹரிஹரன் என்று கூறினார். நீதிமன்றம் வரிசையில் 2 வதாக நின்ற நபரை பார்த்து உங்கள் பெயர் என்ன என்று கேட்டபோது அவர் தன்னுடைய பெயர் ராஜா என்ற சஞ்சய் என்று கூறினார். நீதிமன்றம் வரிசையில் 3 வதாக நின்ற நபரை பார்த்து உங்கள் பெயர் என்ன என்று கேட்டபோது அவர் தன்னுடைய பிரபாகரன் என்று கூறினார். நீதிமன்றம் வரிசையில் 5 வதாக நின்ற நபரை பார்த்து உங்கள் பெயர் என்ன என்று கேட்டபோது அவர் தன்னுடைய பெயர் கோகுல் என்று கூறினார்.)

8) நாங்கள் அப்போது விட்டு விட்டு விடுங்கள் என்று கத்தினோம். மற்ற நபர்கள் சுற்றி வளைத்துக்கொண்டு சசிக்குமாரை வெட்டும்போது யாரையும் கிட்டக்க வரவிடாமல் **சுஜித்குமார், மோகன்ராஜ், ரஞ்சித், சரண், பிரேம், வசந்த், நிமோசன், சபரி** ஆகியோர் தடுத்துகொண்டு நின்றார்கள். இந்த நபர்களை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். எதிரிகளில் வரிசையில் 7 வதாக நிற்பவர் சுஜித்குமார் என்று கூறினார். அவரை நீதிமன்றம் உன்னுடைய பெயர் என்ன என்று கேட்டபோது அவர் தன்னுடைய பெயரை சுஜித் குமார் என்று ஒப்புக்கொண்டார். எதிரிகளில் வரிசையில் 9 வதாக நிற்பவர் மோகன்ராஜ் என்று கூறினார். அவரை நீதிமன்றம் உன்னுடைய பெயர் என்ன என்று கேட்டபோது அவர் தன்னுடைய பெயரை மோகன்ராஜ் என்று ஒப்புக்கொண்டார். எதிரிகளில் வரிசையில் 13 வதாக நிற்பவர் ரஞ்சித் என்று கூறினார். அவரை நீதிமன்றம்

உன்னுடைய பெயர் என்ன என்று கேட்டபோது அவர் தன்னுடைய பெயரை ரஞ்சித் என்று ஒப்புக்கொண்டார்.

எதிரிகளில் வரிசையில் 8 வதாக நிற்பவர் சரண் என்று கூறினார். அவரை நீதிமன்றம் உன்னுடைய பெயர் என்ன என்று கேட்டபோது அவர் தன்னுடைய பெயரை சரண் என்று ஒப்புக்கொண்டார். எதிரிகளில் வரிசையில் 10 வதாக நிற்பவர் பிரேம் என்று கூறினார். அவரை நீதிமன்றம் உன்னுடைய பெயர் என்ன என்று கேட்டபோது அவர் தன்னுடைய பெயரை பிரேம் என்று ஒப்புக்கொண்டார். எதிரிகளில் வரிசையில் 11 வதாக நிற்பவர் வசந்த் என்று கூறினார். அவரை நீதிமன்றம் உன்னுடைய பெயர் என்ன என்று கேட்டபோது அவர் தன்னுடைய பெயரை வசந்த் என்று ஒப்புக்கொண்டார். எதிரிகளில் வரிசையில் 12 வதாக நிற்பவர் நிமோசன் என்று கூறினார். அவரை நீதிமன்றம் உன்னுடைய பெயர் என்ன என்று கேட்டபோது அவர் தன்னுடைய பெயரை நிமோசன் என்று ஒப்புக்கொண்டார். எதிரிகளில் வரிசையில் 6 வதாக நிற்பவர் சபரி என்று கூறினார். அவரை நீதிமன்றம் உன்னுடைய பெயர் என்ன என்று கேட்டபோது அவர் தன்னுடைய பெயரை சபரி என்று ஒப்புக்கொண்டார்.

9) நான் கத்திக்கொண்டிருந்தபோது என்னை புதரில் தள்ளிவிட்டு அங்கிருந்து அனைவரும் ஓடிவிட்டார்கள்,.

10) சசிக்குமாரை வெட்டிய அருவாள் மற்றும் வாளை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். என்னிடம் காட்டப்படும் அருவாளைதான் ராஜா வைத்துக்கொண்டு சசிக்குமாரை வெட்டினார். என்னிடம் காட்டப்படும் வாளை சக்தி வைத்துக்கொண்டுதான்

சசிக்குமாரை சக்தி வெட்டினான். அந்த அருவாள் இதுதான். **அது சா.பொ.1** ஆகும். அந்த வாள் இதுதான். அது **சா.பொ.2** ஆகும்.

11) எதிரிகளில் 1வதாக நிற்கும் ஹரிஹரன் என்பவரின் தூண்டுதலின் பேரில்தான் சசிக்குமாரின் கொலை நடந்தது. எதிரிகளில் வரிசையில் 1வதாக நிற்பவர் ஹரிஹரன் என்று கூறினார். அவரை நீதிமன்றம் உன்னுடைய பெயர் என்ன என்று கேட்டபோது அவர் தன்னுடைய பெயரை ஹரிஹரன் என்று ஒப்புக்கொண்டார்.

11) இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். 9.9.2025 சம்பவ இடத்தில் விசாரித்தார்கள். 15.09.2025ம் தேதி நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றத்தில் விசாரித்தார்கள். 23.09.2025 அன்று மீண்டும் போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் நடந்த விசயங்களை சொன்னேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லாததால் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன் வராத காரணத்தினால் அவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய ஏதும் இல்லை என முடிக்கப்பட்டது.

VELMURUGAN P

Digitally signed by VELMURUGAN P
Date: 2026.04.08 16:51:28 +0530